03 .10.2024 **OS.No. 66/2020**

**பி.வா.சா. 1 பெயர்: பசுபதி** த/பெ. **துரைசாமி**

**சாட்சி ஆஜர்.** சத்திய பிரமா**ணம் செய்யப்பட்டார்.**

பிரதிவாதிகள் **1** முதல் **3** வரை **குறுக்கு விசாரணை:**

தாவா சொத்தின் சர்வே எண் 4/3A. இந்த ஒரு சர்வே எண் குறித்து தான் தாவா தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அதன் தாவா சொத்து விஸ்தீரணம் 2.80 ஏக்கர் ஆகும். தாவா சொத்தின் செக்கு பந்தி வடக்கு பகுதியில் தார் ரோடிலும், கிழக்கில் எனக்கு சொந்தமான மற்றொரு நிலமும், தெற்கில் ராஜேந்திரனுக்கு சொந்தமான இடத்தை தற்போது நான் விலைக்கு வாங்கிய நிலமும், மேற்கில் வாய்காலும் உள்ளது. 1978-ல் மேற்படி தாவா சொத்து யாருக்கு பாத்தியபட்டது என்றால் எனது தாத்தாவுக்கு பாத்தியபட்டது ஆகும். அந்த சொத்தை யாரிடம் இருந்து எனது தாத்தா விலைக்கு வாங்கினார் என்றால் அது தெரியாது. விலைக்கு பெற்ற போது தாவா சொத்தை அளந்து பார்த்தார்களா என்றால் ஆம். தாவா சொத்தில் எவ்வளவு நிலத்தை ஆதிதிராவிடர்க்கு கொடுத்தோம் என்றால் எனது அப்பா கொடுத்தார். அளவு எனக்கு தெரியாது. தாவா சொத்தில் எத்தனை நபர்கள் வீடு கட்டி உள்ளார்கள் என்றால் அது பற்றி தெரியாது. 1999-ல் நான் தாவா சொத்து குறித்து கிரைய பத்திரம் எதுவும் ஏற்படுத்தினேனா என்றால் இல்லை. ஆதிதிராவிடர்க்கு கொடுத்தது போக தற்போது மீதம் உள்ள நிலம் எவ்வளவு என்றால் எனது அத்தைக்கு கொடுத்து விட்டேன். அதனால் அளவு சரியாக தெரியவில்லை. தாவா சொத்தில் பழைய கோவில் உள்ளது என்றால் சரிதான். கல்சிலையாக இருந்தது. நான் மாரியம்மன் கோவிலாக கட்டியுள்ளேன். 1 முதல் 8 பிரதிவாதிகள் நிலம் எந்தந்த சர்வே எண்ணில் உள்ளது என்றால் எனது நிலத்திற்கு கிழக்கு பக்கத்தில் குமார் மாதப்பன் நிலமும், ராணிக்கு ஓடை அருகிலும், மற்றவர்களுக்கு எங்கு உள்ளது என்றால் சரியாக தெரியவில்லை. பன்னீர், ராஜா ஆகியோர் நிலம் எனது நிலத்திற்கு அருகில் உள்ளதா என்றால் இல்லை. 4-ம் பிரதிவாதி ராஜாவை தெரியும் அவரது முழு பெயர் தெரியாது. கோவிலுக்கு எப்போது பண்டிகை என்றால் கூல் ஊத்துவோம் நாங்களே பூசை செய்வோம் கோவிளில் எத்தனை சிலைகள் உள்ளது என்றால் சுமார் 1 1/2 அடியில் ஒரு சிலை உள்ளது. எனது அப்பா காலத்தில் சிலையை எடுத்து வந்தார்கள். வருடம் மற்றும் கும்பாபிசேகம் நடைபெற்ற தேதி ஞாயபகம் இல்லை.

எதிர் மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

**மறுவிசாரணை: இல்லை.**

ஒம்/- திருமதி. G.கலைவாணி, பி.ஏ., பி.எல்.,
சார்பு நீதிபதி, சார்பு நீதிமன்றம்,
ஊத்தங்கரை.